சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்கு சிறப்பாக பங்காற்றும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24–இல் விருது வழங்குதல் – 2026–2027–ஆம் ஆண்டுக்கான மாநில அரசின் விருது வழங்குவதற்கு ரூ.1,50,000/– நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை[சந5(2)]த் துறை

அரசாணை (ப) எண்.250

நாள்: 06.11.2026
ஸ்ரீ பராபவ, ஐப்பசி 20,
திருவள்ளுவர் ஆண்டு 2057

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.64, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள்.18.09.2017.
2. அரசாணை (ப) எண்.185, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை (சந5(2)த்) துறை, நாள்.24.07.2025.

மீண்டும் படிக்க:

3. சமூக நல இயக்குநரின் கடித ந.க.எண்.1309610/குந2/2025, நாள்.05.05.2026.

******

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்கு சிறப்பாக பங்காற்றும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24–இல் மாநில அரசின் விருது வழங்குவதற்கு அனுமதியும், அதற்கான செலவினமாக விருதுக்கான காசோலை ரூ.1.00 இலட்சமும், பாராட்டு பத்திரம் மற்றும் ஏனைய சில்லறைச் செலவினங்களுக்காக ரூ.25,000/–ம் ஆக மொத்தம் ரூ.1,25,000/– மட்டும் நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்கு சிறப்பாக பங்காற்றும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு 2025–2026–ஆம் ஆண்டு தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24–இல் மாநில அரசின் விருதுகள் வழங்கி ரூ.1,50,000/– வீதம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சமூக நல இயக்குநர் அவர்கள் 2026–2027 ஆம் ஆண்டும் தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24–இல் மாநில அரசின் விருது வழங்கும் திட்டத்தினை தொடர்வதற்கு, பெண் குழந்தை திருமணங்களைத் தடுத்து, அனைத்து பெண் குழந்தைகளும் கல்வி கற்றலை உறுதி செய்ய பாடுபட்டு வீரதீர செயல்புரிந்த 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24–இல் விருது வழங்க உரிய தொடராணை வழங்குமாறும், அத்தொகையினை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு, தொகுதி–I–ன் பிரிவு 99–இன்கீழ் முன்பணமாகப் பெற்று செலவினம் மேற்கொள்ள உரிய அனுமதி மற்றும் ஆணை வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி மூன்றிலுள்ள சமூக நல இயக்குநரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த அரசு, அதனை ஏற்று 2026–2027–ஆம் ஆண்டிற்கு பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்கு சிறப்பாக பங்காற்றும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தை ஒருவருக்கு தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24–இல் மாநில அரசின் விருது வழங்குவதற்கு சமூக நல இயக்குநருக்கு உரிய அனுமதியும், இவ்விருதுக்கான காசோலை, பாராட்டு பத்திரம் தயார் செய்தல் மற்றும் ஏனைய சில்லறைச் செலவினம் ஆகியவற்றுக்கு ரூ.1,50,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. இந்நேர்வு தொடர்பாக ஏதேனும் முன்பணத் தொகை நிலுவையில் இருப்பின் அதை சரிகட்டப்பட வேண்டும்.

5. மேலும், மேற்காண் விருதினை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது: –

1.	விருது காசோலை	ரூ. 1,00,000
2.	பாராட்டு பத்திரம் தயார் செய்ய செலவினம்	ரூ. 10,000
3.	எதிர்பாரா செலவினம்	ரூ. 40,000
	மொத்தம்	**ரூ. 1,50,000**

6. மேலே பத்தி–4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்: –

"2235 – சமூக பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் 001 – நெறிப்படுத்தலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – AA – சமூக நல இயக்ககம் – 359 பரிசுகளும், வெகுமதிகளும் – 01 – பரிசுகளும் வெகுமதிகளும்".

(IFHRMS த.தொ.கு 2235 – 02 – 001 – AA – 35901)

7. மேலும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுத்து, அனைத்து பெண் குழந்தைகளும் கல்வி கற்றலை உறுதி செய்ய பாடுபட்டு, வீரதீர செயல் புரிந்த 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு தேசிய பெண் குழந்தை தினத்தில் (ஜனவரி 24) விருது வழங்குவதற்கு அரசாணை (ப) எண்.185, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, நாள் 24.07.2025–இல் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுமாறு சமூக நல இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

8. இவ்வரசாணையானது நிதித்துறையின் இசைவுடன், அதன் மின் அலுவலக எண்.13973241/நிதி(சந)/2026, நாள். 05.11.2026-இன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.பல்லவி பல்தேவ்,
அரசு செயலாளர்.

பெறுநர்:

சமூக நல இயக்குநர், சென்னை-600 005.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-600 005.
முதன்மை மாநிலக் கணக்காயர் அலுவலகம் (G&SSA),
சென்னை-600 018.
மாநிலக் கணக்காயர், சென்னை- 600 018.

நகல்:

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் மற்றும்
மகளிர் உரிமை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை - 600 009.
அரசு செயலாளர் அவர்களின் முதுநிலைத் தனிச் செயலர்,
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சென்னை-9.
நிதித் (சந) துறை, சென்னை-600 009.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை- 600 009.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந(2) துறை,
சென்னை - 600 009.
இருப்புக்கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

06/11/2026

பிரிவு அலுவலர்.

06.11.26